# මහවැලි සංවර්ධන හා පරිසර අමාත්‍යාංශය
# மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு
# Ministry of Mahaweli Development and Environment

"සම්පත්පාය", අංක 82, රජමල්වත්ත පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
"சம்பத்பாய", இல 82, இரஜமல்வத்த வீதி, பத்தரமுல்ல, இலங்கை.
"Sampathpaya", No 82, Rajamalwatta Road, Battaramulla, Sri Lanka.
Gen.Tel. + 94-11-2882112 - 3

ලේකම් / செயலாளர் / Secretary: +94-11-2877290
ෆැක්ස් / தொலை நகல் / Fax: +94-11-2877292

මගේ අංකය / எனது இல / My No: 03/02/03/02/07- GSMB
ඔබේ අංකය / உமது இல / Your No:
දිනය / திகதி / Date: 2015.09.29

**சுற்றாடல் சுற்று நிருபம் 02/2015**

மாவட்டச் செயலாளர்கள் / அரசாங்க அதிபர்கள்
அனைத்துப் பிரதேசச் செயலாளர்கள்

**<u>மண் மற்றும் குறு மண் அகழ்வு</u>**

01. சட்ட ரீதியான அனுமதிப் பத்திரத்தைப் பெறாது மேற்கொள்ளப்படுகின்ற மண் வெட்டுதல் மற்றும் பெற்றுக் கொண்ட அனுமதிப் பத்திரங்களை முறை கேடாகப் பயன்படுத்துதல் ஆகிய காரணிகளால் எழுந்துள்ள சுற்றாடல் பிரச்சினைகள் மற்றும் சமூகப் பிரச்சினைகளுக்குத் தீர்வாக மண் அகழ்வு மற்றும் போக்குவரத்து தொடர்பில் முறையான நிருவாக முறையொன்றை ஏற்படுத்துவதற்கு மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சும், புவிச் சரிதவியல் அளவைச் சுரங்கப் பணியகமும் ஒருங்கிணைந்து முறையான செயற் திட்டமொன்றை அறிமுகப்படுத்துவதற்குத் தீர்மானித்துள்ளது.

02. இதனால், 2010.10.20 ஆந் திகதியுடைய இலக்கம் 02/06/09 (viii) – GSMB ஐ உடைய சுற்று நிருபத்துக்கு அமைய மண், குறு மண் மற்றும் மணல் ஆகிய கனிப் பொருட்களுக்குப் புவிச் சரிதவியல் அளவை சுரங்கப் பணியகத்தினால் 2009 இலக்கம் 66 ஐ உடைய திருத்தியமைக்கப்பட்ட 1992 இலக்கம் 33 ஐ உடைய சுரங்கங்கள் மற்றும் கனிப் பொருட்கள் சட்ட மூலத்தின் 8 (1) மற்றும் 8 (2) ஆம் பந்திகளுக்கு அமைய அனுமதிப் பத்திரங்களை வழங்குவதற்குப் பிரதேசச் செயலாளர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்ட பணிகளை, மேலும் முறைப்படுத்தும் நோக்கில் கீழே குறிக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுடன் கூடியதாக இச் சுற்று நிருபம் வெளியிடப்படுகின்றது.

   i. <u>வர்த்தக ரீதியற்ற பணிகளுக்கென</u> மேற்கொள்ளப்படுகின்ற மண் மற்றும் குறு மண் ஆகிய கனிப் பொருட்களின் 35 கியூப் எனும் உச்சளவு வரை நிலையப் பரீட்சிப்பு மேற்கொண்ட பின் கிராம சேவகரினால் முன் வைக்கப்படுகின்ற சிபார்சுடன் கூடிய அறிக்கை, அனுமதிக்கப்பட்ட நிர்மாணிப்புத் திட்டம் மற்றும் தேவைப்படுகின்ற சந்தர்ப்பங்களில் குறித்த மாகாண நிருவாக நிறுவனத்தினதும், மத்திய சுற்றாடல் அதிகார சபையினதும் சிபார்சுடன் கூடியதாகப் பிரதேசச் செயலாளரினால் மாத்திரம் அனுமதிப் பத்திரம் வழங்கப்பட வேண்டும். எனினும், இது தொடர்பில் எழுகின்ற விஷேடித்த விடயங்களைக் கருத்திலெடுத்துத் தேவையான சந்தர்ப்பங்களில் புவிச் சரிதவியல் அளவை சுரங்கப் பணியகத்தினதும், தேசிய கட்டிட ஆய்வு நிலையத்தினதும் மேற்பார்வைக்கு இவ் விடயம் உள்ளாக்கப்படுதல் வேண்டும்.

   ii. மேலே குறிப்பிடப்பட்டவாறு பிரதேசச் செயலாளரினால் வழங்கப்படுகின்ற அனுமதிப் பத்திரம் செல்லுபடியாகும் காலம் மிகத் தெளிவாகக் குறிப்பிடப்படுதல் அவசியமாகக் காணப்படுவதுடன், நடைமுறை நிலைமைகளைக் கருத்திலெடுத்து அதன் செல்லுபடியாகும் நாட்களின் எண்ணிக்கையைத் தீர்மானிக்க வேண்டும். ஏதேனும் தடுக்க முடியாத காரணிகளால் ஏற்படுகின்ற தாமதங்களைக் கருத்திலெடுத்துப் பிரதேசச் செயலாளரினால் இக் கால எல்லை நீடிக்கப்படுதல் வேண்டும்.

   iii. 35 கியுபிற்குக் கூடிய, <u>வர்த்தக செயற்பாடற்ற தேவைகளுக்கென மேற்கொள்ளப்படுகின்ற அகழ்வுப் பணிகளுக்கும், அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்கும்</u> மாவட்டச் செயலாளர், புவிச் சரிதவியல் அளவை சுரங்கப் பணியகம், மத்திய சுற்றாடல் அதிகார சபை, மகாவலி அதிகார சபை, வனப் பாதுகாப்புத் திணைக்களம், இலங்கை பொலிஸ், இலங்கை காணி மீட்பு மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம், மாகாண நிருவாக நிறுவனம் ஆகிய நிறுவனங்கள் உள்ளடங்குவதாக மாவட்டக் குழுவொன்றின் மூலம் அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக் கொடுத்தல் தொடர்பில் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

**"මේ මහපොළව සහ ගහකොළ මිනිසාට මෙන්ම අහසේ පියාසරන සියොතුන්ට ද සිව්පාවුන්ට ද සියලු සතුන්ට ද එකසේ අයිතිය"**
"இப் பூமியும், மரஞ் செடி கொடிகளும் மனிதனுக்குப் போன்றே வானில் பறந்து திரியும் பறவைகளுக்கும், பூமியில் வாழும் உயிரினங்களுக்கும், அனைத்து விலங்குகளுக்கும் ஒருமித்துச் சொந்தமானது"
"This great earth and the flora on it equally belong to the man and the birds flying in the sky, the quadrupeds and all creatures living on earth"

   iv. மேலே iii இல் குறிப்பிடப்பட்டுள்ள குழு மாவட்டச் செயலாளர்கள் / அரசாங்க அதிபர்களின் சிபார்சுகளின் கீழ் மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் செயலாளரினால் நியமிக்கப்படும்

   v. மேலே iv இல் குறிப்பிடப்பட்டுள்ள குழு மாதத்துக்கொரு முறையேனும் கூடுதல் வேண்டும். இக் குழுவில் குறைந்தது ஐந்து (05) அங்கத்தவர்களாவது உள்ளடங்குதல் வேண்டும்.

03. மண் மற்றும் குறு மண் அகழ்வு மற்றும் போக்குவரத்து தொடர்பில் வழங்கப்பட்டுள்ள அனுமதிப் பத்திரங்கள் தொடர்பில் பொலிஸுக்கு அறிவுறுத்தவும், தேவையான சந்தர்ப்பங்களில் முறைக்கேடுகளைத் தடுப்பதற்குப் பொலிஸின் உதவியைப் பெறுவதற்கும் நடவடிக்கை எடுக்கலாம். குறிப்பாக மண் மற்றும் குறு மண் போக்குவரத்தின் போது அனுமதிப் பத்திரம் உள்ளதா என்பது தொடர்பில் பொலிஸ் பரீட்சிப்பை மேற்கொள்ள வேண்டும்.

04. இதன் போது மண் மற்றும் குறு மண் தேவைப்படுகின்ற தேசிய மற்றும் பிரதேச ரீதியாக முக்கியத்துவமுள்ள அபிவிருத்திக் கருத்திட்டங்களின் விருத்திக்குத் தடை ஏற்படாத வகையில் மேலே குறிக்கப்பட்டுள்ள நடை முறைகளைச் செயற்படுத்தும் விதி முறைகளை இவ் அமைச்சின் அனுமதியின் கீழ் சந்தர்ப்பத்துக்கேற்ற முறையில் பிரதேசச் செயலாளர் / அரசாங்க அதிபர்களினால் தயாரித்துக் கொள்ள வேண்டும்.

05. முறையான செயற்பாடொன்றை அறிமுகப்படுத்தும் வரை வர்த்தக நோக்கில் மண் மற்றும் குறு மண் அகழ்வுக்கெனப் புவிச் சரிதவியல் அளவைச் சுரங்கப் பணியகத்துக்கு முன் வைக்கப்படுகின்ற வேண்டுகோள்கள் அப் பணியகத்தினால் கவனத்திலெடுக்கப்படமாட்டாது.

06. இச் சுற்று நிருபத்திலுள்ள அறிவுறுத்தல்களை நாடு பூராகவும் 2015 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 15 ஆம் திகதியிலிருந்து செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

**உதய ஆர் செனெவிரத்ன**
செயலாளர்

பிரதிகள்:

1. சனாதிபதிச் செயலாளர் - தய. அறிந்து கொள்வதற்கு
2. பிரதமரின் செயலாளர் - தய. அறிந்து கொள்வதற்கு
3. செயலாளர், அரச நிருவாகம் மற்றும் முகாமைத்துவ அமைச்சு - தய. அறிந்து கொள்வதற்கும், தேவையான நடவடிக்கைகளுக்
4. ஏனைய அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்கள் - தய. அறிந்து கொள்வதற்கும், தேவையான நடவடிக்கைகளுக்கும்
5. கணக்காய்வாளர் நாயகம் - தய. அறிந்து கொள்வதற்கும், தேவையான நடவடிக்கைகளுக்கும்
6. பொலிஸ் மா அதிபர், இலங்கை பொலிஸ் திணைக்களம் - தய. அறிந்து கொள்வதற்கும், தேவையான நடவடிக்கைகளுக்கும்
7. தலைவர், புவிச் சரிதவியல் அளவை சுரங்கப் பணியகம் - தய. அறிந்து கொள்வதற்கும், தேவையான நடவடிக்கைகளுக்கும்
8. தலைவர், மத்திய சுற்றாடல் அதிகார சபை - தய. அறிந்து கொள்வதற்கும், தேவையான நடவடிக்கைகளுக்கும்